12th November 1957]

Sri A. GOVINDASAMY : சங்கரன்கோயில் பகுதியில் கடந்த 13 ஆண்டுகளாக மழை பெய்யாத காரணத்தால் குடிக்கவும், குளிக்கவும் தண்ணீர் கஷ்டமாக இருக்கிறது. சட்டசபை எஸ்டிமேட் கமிட்டி அங்கே போயிருந்தபோது குளிக்க ஒரு கிணற்றுக்குச் சென்ற சட்டசபைக் காரிய தரிசியை இரண்டணா கொடுத்து முன்னால் ரிசர்வு செய்து கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டார்கள். ஆகவே அங்கே அதிகமான கிணறுகளை வெட்ட ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அந்தப் பகுதியில் தண்ணீர் கஷ்டம்தான். இருக்கிற கிணறுகளை ஆழமாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சங்கரன்கோயிலுக்காக ஒரு திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

Sri D. S. ADIMOOLAM : இப்பொழுது அதிர்ஷ்டவசமாக மழை பெய்திருப்பதால் ஆயிரக்கணக்கான மனுதாரர்கள் இந்த ஸ்கீமிலே பணம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் கலெக்டர் இதற்கு அவசியம் இல்லை என்று சொல்லிவிட்டார். சென்ற 7, 8 மாதமாக நசிந்து போனவர்கள் விவசாயம் செய்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதால் அவர்கள் கிணறுகளை ஆழமாக தோண்டி விவசாயம் செய்வதற்கு அனுகூலமாக லோன்-சப்சிடி கொடுத்தால் உதவியாக இருக்கும் என்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஆயிர ரூபாய் சாங்ஷன் செய்து 500 ரூபாய் கடனாகவும், 500 ரூபாய் உதவியாகவும் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்வார்களா ? 9-30 a.m.

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போது மழை பெய்திருக்கிறதென்று சொன்னார்கள். ஆகவே மழை பெய்து இம்மாதிரியான வசதி இல்லை என்றால், கொடுக்கப்பட மாட்டாது. எங்கெங்கே வசதி வேண்டுமோ, எங்கெங்கே நிலைமை அவசியமோ அங்கேயெல்லாம் சர்க்கார் வசதி அளிக்கும்.

Sri K. SATTANATHA KARAYALAR : விவசாயிகள் இந்த கடன் உதவிக்காக அபேட்சித்தால் அவர்களுக்கு கொடுப்பதற்கு அதிக காலதாமதம் ஏற்படுகிறது. இதை சீக்கிரமாக கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுப்பதற்கு, கடன் கேட்பவர்களின் தொகை மிக அதிகமாக இருப்பதனால், அதில் நல்லதும் கெட்டதும் இருப்பதனால், அவைகளை ஆராய்ந்து பார்த்து கொடுக்கவேண்டியிருப்பதனால் இந்த காலதாமதம் ஏற்படுகிறது.

Jamabandi at Erode.

* 150 *Q.*—**Sri K. R. NALLASIVAM** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of petitions given by the ryots to the Jamabandi Officer, Erode, during June-July 1957 at the time of jamabandi; and

(*b*) the number disposed of?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The particulars have been called for from the Collector of Coimbatore.

Sri K. R. NALLASIVAM : அங்கே ஜமாபந்தி கூடும்பொழுது விவசாயிகள் நியாயமாக கட்டவேண்டிய தொகையை நிர்ப்பந்தமாக கட்ட வேண்டியிருக்கிறது. அவர்கள் ஏராளமான தொல்லைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாத்து நடுவதற்குக்கூட பணம் இல்லாமல்

[12th November 1957

தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இங்கு அதிகமான அதிகாரிகளைப் போட்டு காலதாமதம் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கு ஜமாபந்தி நடத்துவதற்கு ஒரு ஆபீசரை போட்டிருக்கிறோம். அவர் ஆங்காங்கே சென்று வசூல் செய்ய வேண்டி இருப்பதனால் காலதாமதம் ஏற்படுகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, I want to know from the Hon. Minister whether this Jamabandi will be continued and is there any proposal to do away with it?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is now going on, Sir. If there is necessity to do away with it, we will do away with it and if there is necessity to have it, we will have it. (Laughter.)

SRI N. K. PALANISAMI : இப்பொழுது ரெவின்யூ ஆபீசர் அபராதம் போட்டால், அந்தப் பணத்தைக் கட்டிவிட்டு அப்பீல் செய்ய வேண்டும் என்ற நியதி இருக்கிறது. ஆகவே அந்தப் பணம் கட்டாமல் அப்பீல் செய்வதற்கு சர்க்கார் வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்பீல் செய்வதற்கு முன் பணம் கட்டுவது நல்லது என்று தெரிகிறது.

SRI A. VEDARATNAM PILLAI : இந்த ஜமாபந்தியில் அரசாங்க அதிகாரிகள் மாமூல் வாங்குவதை நிறுத்த முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜனங்களுக்கு இப்பொழுது விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மாமூல் வாங்குவோர் இப்பொழுது குறைந்திருக்கிறார்கள்.

SRI N. K. PALANISAMI : ஜமாபந்தியில் கொடுக்கப்படுகின்ற விண்ணப்பத்திற்கு, ஆலோசனை செய்து பதில் கொடுப்பதற்கு தாமதம் ஏற்படுகிறது. இதைத் துரிதமாக செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதிகாரிகள் துரிதமாகத்தான் கொடுக்கிறார்கள். அவர்கள் சிலவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. இருந்தும் பெரிய காலதாமதம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரியவில்லை.

SRI K. VINAYAKAM : Sir, whereas the object of holding the Jamabandi is to come in contact with the District Revenue Officials and whereas it is most probable that all complaints and allegations by the pattadars are settled on the spot, will the Government think of even retaining Jamabandi and not abolishing it for any cause?

THE HON. SRI M. A. MANICKAVELU : I have never given any indication that it will be abolished. The thing is going on now and there is no immediate prospect, I can think of, of its abolition.

SRI T. IRUSAPPAN : தலைவர் அவர்களே, போன தாலுக்கா ஜமாபந்தியில் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசிலனைக்கு வரவில்லை. இதன் உண்மை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்குத் தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

12th November 1957]

Sri A. V. P. ASAITHAMBI : இந்த ஜமாபந்தி என்ற வார்த்தை ஏதோ சாப்பாடு விஷயம் என்பதுபோல் இருக்கிறது. இந்த வார்த்தை எங்கிருந்து கண்டுபிடித்தார்கள் என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லு வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : ஜமாபந்தி என்பது ஹிந்தியோ உருது வார்த்தையோ தெரியவில்லை. ஜமாபந்தியில் எல் லோரும் ஒன்றாக சேருகிறார்கள். அப்படி ஒன்றாகச் சேர்ந்தால் சாப்பிடு வதற்கு நிலைமை ஏற்படுகிறது.

Sri A. GOVINDASAMY : ஜமாபந்தி கூடுகிற ஒவ்வொரு மாநாட் டிற்கும் கனம் மந்திரி அவர்கள் சென்றால் அங்கேயே டக் டக் என்று உத்திரவு போடுவதற்கு முடியும். ஆகவே மந்திரி அவர்கள் அவ்வாறு செய்வார்களா ?

Mr. SPEAKER : The hon. Member is only giving information.

Sri K. R. NALLASIVAM : கனம் மந்திரி அவர்கள் சொல்லும் போது விவசாயிகள் ரெவின்யூ வகையிலே முன்னாலே பணம் கட்டி விட்டால்தான் அப்பீல் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். இவைகளை எல்லாம் ஒழுங்கான முறையில் கவனித்து நிர்ணயம் செய்வதற்கு அதிகமான அதிகாரிகளை போடுவார்களா ? அவர்களின் அபராதத்தை வசூலிக்காமல் இருப்பதற்கு வகை செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இம்மாதிரி செய்வதற்கு யோசனை இல்லை.

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGE FROM THE COUNCIL.

Mr. SPEAKER : I have to announce to the House that I have received the following message, dated 11th November 1957, from the Hon. the Chairman, Madras Legislative Council :—

"In accordance with Rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Repealing and Amending Bill, 1957 (L.A. Bill No. 17 of 1957) as passed and agreed to by the Council on the 11th November 1957 without any amendment and signed by me."

III.—TIME FOR RECEIPT OF CUT MOTIONS, AMENDMENTS, ETC.

Mr. SPEAKER : I have also to remind hon. Members that under Rule 159 of the Madras Assembly Rules, 3 of the clock in the afternoon today is the last hour within which notice of cut motions to the Supplementary Demands for 1957–58 should be given to the Secretary, Legislature Department.

I have also to inform the House that I had fixed yesterday as the last day for receiving amendments to the Madras Money-Lenders Bill. But hon. Members are giving notice of amendments even now. All amendments received beyond 3-30 p.m. will not be admitted.